பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

45 ] சென்னை—ஞாயிறு, பிப்ரவரி 16, 1947. [ விலை. அணா 2

## ஏன் பீகார் போகவில்லை ?

காந்தியடிகள் சாதுர்க்கில் என்னும் கிராமத்தில் தங்கியபொழுது, அவரிடம் நான்கு முஸ்லிம் வாலிப நண்பர்கள் வந்து, " நவகாளியில் கொலைகள் அதிகமாக நடந்ததாக சொல்லுவது தவறல்லவா? மிகைப்படுத்தி கூறுகிறீர்களல்லவா ? " என்று கேட்டார்கள். அதற்கு காந்தியடிகள் கூறிய பதிலாவது :—

" நான் பார்த்ததை எல்லாம் சொல்ல விரும்பாததினாலேயே நான் இவற்றைப்பற்றி இது வரை கூறவில்லை. நான் கூறுவதால் நன்மை உண்டாகுமானால் நான் கூற தய ராக இருக்கிறேன். நவகாளியில் 5000 கொலை ள் நடந்ததாக சொல்லுவதற்கு ஆதாரம் இருப்ப ் க் தெரியவில்லை. இந்த தொகையைவிட மிகக் குறைந்த தொகைதான் என்பதில் சந்தேகமில்லை. பீகாரில் நடந்த கொலைகளும் அட்டூழியங்களும், நவகாளியில் நடந்ததைவிட மிகமிக அதிகமாகும். அதைச் சொல்லுவதால் நான் பீகாருக்கு போகவேண்டியது அவசியமென்று தோன்றும். ஆனால் நான் இங்கிருந்து செய்வதை விட பீகாருக்குப்போய் அதிகமான சேவை செய்துவிட முடியும் என்று தோன்றவில்லை. போக வேண்டியது அவசியமென்று எனக்காகத் தோன்றாமல், பிறர் கூறுவதற்காக நான் அங்கே போவேனேயானால், நான் எதற்கும் பயன்படாதவனே ஆவேன். இங்கு இருப்பதை விட பீகாரில் இருப்பது தான் அவசியம் என்று என் மனதில் படுமானால் பிறர் சொல்லாமலே நான் அங்கே போய்விடுவேன். ஹிந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் அதிகமான சேவை செய்யக்கூடிய இடம் இதுதான் என்று எண்ணுவதால் தான் நான் இங்கே நவகாளியில் இருந்து கொண்டிருக்கிறேன்."

## கால் நடைப் பிரயாணம்

காந்தியடிகள் பிப்ரவரி மாதம் 6-ந் தேதி மாலை தரம்பூரில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் கூறியதாவது :—

" நான் வெறுங் காலோடு நடப்பதைக் குறித்து ஜனங்கள் வருத்தப்படுவதாகத் தெரிகிறது. ஆனால் அவர்கள் வருத்தப்படவேண்டிய அவசியமில்லை. வெறுங் காலோடு நடப்பது எனக்கு கஷ்டமாயில்லை. இங்குள்ள பூமி வெல்வெட் மாதிரி மிருதுவாய் இருக்கிறது. பசும் புல் முளைத்திருப்பது நல்ல கம்பளம் விரித்திருப்பதுபோல் இருக்கிறது. அதனால் இங்குள்ள பூமியிலும் புல்லிலும் நடப்பதற்கு செருப்பு அணிய வேண்டிய அவசியமில்லை. குஜராத் பிரதேசத்தில் இது போல் செருப்பு இல்லாமல் நடக்க முடியாது. அத்துடன் எப்பொழுதும் ஸ்தல யாத்திரையை வெறுங் காலோடுதான் செய்யவேண்டும். என்னுடைய பிரயாணம் ஸ்தல யாத்திரையே என்பது என்னுடைய கருத்து. வெறுங் காலோடு நடப்பது எனக்கு சிரமமாக இல்லை. கடைசிவரை இப்படியே நடந்து செல்வதற்கு கடவுள் அருள்வார் என்றே நம்புகிறேன்."

## அரசியல் நிர்ணய சபை

காந்தியடிகள் பிப்ரவரி மாதம் 6-ந் தேதி மாலை தரம்பூரில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் உரைத்தார். கேள்வியும் பதிலும் வருமாறு :—

கேள்வி : மாகாணங்கள் தனித்தனியாக பிரிந்து பரிபூரண சுயேச்சையுடன் வாழ விரும்பினால் அவைகள் எந்த விதமான அரசியலை வகுத்துக்கொள்ள வேண்டும் ?

பதில் : இந்தியா முழுவதற்கும் எவ்விதமான பரிபூர்ண சுயேச்சை அரசியல் வகுக்கப்படுமோ அது போன்ற அரசியல் தான்.

கேள்வி : தாங்கள் கனவு காணும் சுதந்திர இந்தியாவில் தேசத்திற்கு சரீரப் பிரயாசை மூலம் சேவை செய்பவர்களுக்கே ஓட்டுரிமை உண்டென்று தாங்கள் 1925-ம் வருஷத்தில் கூறினீர்கள். இப்பொழுதும் அதே கருத்தையே கூறுகிறீர்களா ?

பதில் : 1925-ம் வருஷத்தில் கூறியதையே இப்பொழுதும் கூறுகிறேன். ஆணோ, பெண்ணோ ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேற்பட்டவர்கள் தேசத்திற்கு சரீர பிரயாசை மூலம் சேவை செய்ய வேண்டும். அவர்களுக்கே ஓட்டுரிமை கொடுக்கவேண்டும். அப்படிச் செய்தால் தேக உழைப்பாளிகள் சுலபமாக ஓட்டர்கள் ஆகிவிடுவார்கள். சரீர பிரயாசை செய்ய கஷ்டப்படுகிற பணக்காரர்களும் வக்கீல்களும் வியாபாரிகளும் தான் ஓட்டுரிமை பெற சிரமப்படுவார்கள்.

கேள்வி: அடுத்தடுத்துள்ள மாகாணங்கள் பரிபூர்ண சுயேச்சை என்று கூறாமல் அங்கொன்று இங்கொன்றாக கூறுமானால் அதனால் ஒன்று சேர்ந்துள்ள மாகாணங்கள் ஒன் று சேர்ந்து வேலை செய்வதற்கு இடையூறாக இருக்கு ல்லவா ?

பதில்: சமூகத்தின் அடிப்படைத் தத்துவம் அஹிம்சையாக இருக்குமானால் அத்தகைய கஷ்டம் ஏற்படுமென்று தோன்றவில்லை. ஜனத் தொகை அதிகமாக உள்ளதும் தாகூரையின் சுகர்வர்த்தியையும் உற்பவித்ததுமான வங்காளமானது பரிபூர்ண சுயேச்சை வேண்டுமென்று சொல்லலாம். அபின் வழக்கமுள்ள அஸாமும் வறுமைநிறைந்த ஒரிஸாவும்பீகாரும் வங்காளத்தைப் பார்த்து தாங்களும் பரிபூர்ண சுயேச்சை வேண்டுமென்று கேட்கலாம். பரிபூர்ண சுயேச்சைக்கு நான்கூறும் இலக்கணப்படிபார்த்தால் அதில் தவறு ஒன்றும் கிடையாது. "எல்லோரிடமும் நட்பு. யாரிடமும் பகைமை யில்லை" எ பதே நான் பரிபூர்ண சுயேச்சைக்கு கூறும் இல கணமாகும். ஆனால் நான் கூறுவது காட்டில் தனியே நின்று கதறுவது போலவே இருக்கும். ஆனால் என் சொல்லை கவனியாது இருந்தால் இந்தியாவுக்கு துரதிர்ஷ்டமே ஆகும்.

கேள்வி: ஒரு மாகாணம் சுயேச்சையான அரசியலை வகுத்தால் மற்ற மாகாணங்களும் தாங்களும் அது போல் அமைக்க வேண்டுமென்று விரும்பக் கூடிய விதமாக அமைக்க முடியுமா?

பதில்: எது உண்மையிலேயே நல்லதாக இருக்கிறதோ அது பிறரை கவரும் தன்மையுடையதாகவே இருக்கும்.

கேள்வி: ஏ. தொகுதியிலுள்ள மாகாணங்கள் ஒன்றாக சேர்ந்து ஒரு பொது அரசியலை வகுத்தால் பி. தொகுதியிலும் ஸி. தொகுதியிலுமுள்ள மாகாணங்கள் விரும்பினால் அதில் சேர்ந்து கொள்ள முடியுமா?

பதில்: ஏ. தொகுதியிலுள்ள மாகாணங்கள் ஒன்று சேர்ந்து ஒரு நல்ல அரசியலை வகுக்கக் கூடுமானால் பி. தொகுதியிலுள்ள மாகாணங்களும், ஸி. தொகுதியிலுள்ள மாகாணங்களும் அதில் சேர்ந்து கொள்ள தடை கிடையாது. அது மட்டு மன்று. அதில் சேர்ந்து கொள்ளவே அவைகள் ஆசைப்படும்.

கேள்வி: சமஸ்தானங்கள் இந்திய யூனியனில் சேர்ந்து கொள்வதா சேராமல் இருப்பதா என்பதை அரசர்கள் தீர்மானிக்க வேண்டுமா அல்லது அங்குள்ள ஜனங்கள் தீர்மானிக்க வேண்டுமா? ஜனங்கள் தீர்மானிக்க வேண்டுமானால் சமஸ்தானங்களில் இப்பொழுது காணப்படும் அரசியலில் எவ்விதமான மாற்றங்கள் இப்பொழுது உடனே செய்ய வேண்டும்?

பதில்: நான் ஒரு சாதாரண குடியானவன். ஆனால் நான் கோடிக்கணக்கான ஜனங்களின் கூட்டத்தைச் சேர்ந்தவன். ராஜாக்கள் என்று சொல்லுபவர்கள் 6000 பேர்தான் இருக்கிறார்கள். அவர்களிலும் உண்மையாகவே ராஜாக்கள் என்று சொல்லக் கூடியவர்கள் 100 பேருக்கும் குறைவுதான். இந்தியா விழித்து விட்டபடியால் இனிமேல் ராஜாக்கள் பேரளவில் மட்டுமின்றி அனுஷ்டானத்திலும் குடிகளுடைய ஊழியர்களாகவே தான் இருக்க முடியும். பிரிட்டிஷார் குடிகளுக்கு விரோதமாக ராஜாக்களை கிளப்பி விடக் கூடிய அளவு நாணயமற்றவர்கள் என்று இந்தக் கேள்வியைக் கேட்டவர் எண்ணுவதாக தெரிகிறது. ஆனால் அந்த பயம் எனக்கில்லை. பிரிட்டிஷ் மந்திரி தூது கோஷ்டியின் அறிக்கை அந்தக் கருத்துக்கு இடம் கொடுக்கவில்லை. ஆயினும் எதற்காக இந்தியா தேசம் பிரிட்டிஷ் மந்திரி சபையை எதிர்பார்த்திருக்க வேண்டும்? இந்தியா சுதந்திரமடைய தயாராக இருக்குமானால் லோக மான்ய திலகர் கூறிய படி அதன் பிறப்புரிமையை பெற வொட்டாமல் தடுக்க பிரிட்டிஷாராலும் ராஜாக்களாலும் வேறு யாராலும் முடியாது என்பது நிச்சயம்.

## சுத்தத்திற்கு வறுமை தடையில்லை

நவகாளி ஜில்லாவில் மார்வாரி சகாய சங்கத்தார் வைத்திய உதவி செய்து வருகிறார்கள். அந்தச் சங்கத்தைச் சேர்ந்த டாக்டர், காந்தியடிகளுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கீழ்கண்டவாறு கூறுகிறார்:—

"இந்தப் பகுதியில் பெரும்பாலான ஜனங்கள் தரித்திரர்களாய் இருக்கிறார்கள். எங்கு போனாலும் ஆபாசமாகவும் அசுத்தமாகவும் இருக்கிறது. இதைப்பற்றி தாங்கள் ஜனங்களுக்கு புத்திமதி கூற வேண்டும்"

காந்தியடிகள் இதைக் குறித்து தரம்பூர் பிரார்த்தனைப் பிரசங்கத்தில் கீழ்கண்டவாறு கூறினார்:—

"நான் எப்பொழுதும் சுத்தத்தையும் சுகாதாரத்தையும் விரும்புகிறவன். 50 வருஷ காலமாக நான் மேனாட்டைப் பற்றி குறைவாகவே பேசி வந்திருக்கிறேன். ஆதலால் நான் பிரிட்டிஷாரிடமிருந்து சுத்தத்துக்கு வேண்டிய விதிகளைக் கற்றுக் கொண்டேன் என்பதை கூறுவதற்கு இப்பொழுது சந்தர்ப்பம் கிடைத்ததைப் பற்றி சந்தோஷப்படுகிறேன். இங்கே நவகாளி ஜில்லாவில் குடிப்பதற்கும் சுத்தம் செய்வதற்கும் ஒரே குளத்தை உபயோகப்படுத்துவதைப் பார்க்க எனக்கு வேதனையாக இருக்கிறது. ஜனங்கள் கண்ட கண்ட இடங்களில் எச்சிலை உமிழ்ந்து தெருக்களையும் பாதைகளையும் அசுத்தப்படுத்துகிறார்கள். இந்தியாவில் காணப்படும் பல நோய்களுக்கு இதுதான் காரணம். இடைவிடாது பற்றி நிற்கும் வறுமையும் காரணம்தான். ஆனால் அதைக்கொண்டு அசுத்தப்படுத்துவதை அலட்சியமாக எண்ண முடியாது. இந்த நிலைமையில் இந்தியாவில் ஜனங்கள் இன்னும் உயிரோடு இருக்கிறார்கள் என்பதே ஒரு ஆச்சரியமான விஷயம்தான். ஆனால் உயிரோடு இருப்பவர்களை உயிரோடு உள்ள பிணங்களாகவே சொல்ல வேண்டும். ஆதலால் நவகாளியிலுள்ள ஜனங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு சீக்கிரமாக சுகாதார விதிகளை அனுஷ்டிக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்கு நல்லதாகும். சுகாதார விதிகளை அனுஷ்டிப்பதற்கு வறுமை எவ்வித தடையுமாகாது."

## சமூக பகிஷ்காரம் தவறு

காந்தியடிகள் நந்தி கிராமம் என்னும் கிராமத்தில் தங்கிய பொழுது அவரைப் பார்க்க வந்த நண்பர் ஒருவர் கேள்விகள் கேட்டார். அவற்றைக் குறித்து காந்தியடிகள் தம்முடைய பிரார்த்தனை பிரசங்கத்தில் கூறியதாவது:—

(1) கேள்வி:—முஸ்லிம்கள் ஹிந்துக்களை பகிஷ்கரிக்கிறார்கள். தாங்கள் பயிரிடக் கூடிய அளவுக்கு அதிகமாக நிலங்களை உடைய ஹிந்துக்கள் அதனால் கஷ்டப்படுகிறார்கள். அப்படி அதிகமாக உள்ள நிலத்தை அவர்கள் எப்படி பயிர் செய்வது? தங்கள் யோசனை என்ன?

பதில்:—சமூக பகிஷ்காரம் நடப்பது எனக்குத் தெரியும். ஆனால் சில இடங்களில் மட்டுமே நடக்கிறது என்று அறிவேன். எத்தனை இடத்தில் நடந்தாலும் அது தவறான காரியமே ஆகும். அதனால் இருதரத்தார்க்கும் எவ்வித நன்மையும் கிடையாது, இந்த அபிப்பிராயத்தை அறுபது வருஷ காலமாக சொல்லி வருகிறேன். ஆனால் சமூக பகிஷ்காரம் ஏற்படக் கூடிய ஒரு நிலைமை யாதெனில் முஸ்லிம்கள் ஹிந்துக்களை தங்கள் விரோதிகளாக எண்ணி அவர்களை விட்டு விலகி இருப்பதேயாகும். அந்த நிலைமை யுத்த நிலைமையாகும். இந்தியாவிலுள்ள எவரும் அதைக் கண்டு அஞ்சுவார்கள். ஆனால் ஒரு சிலர் மட்டுமே பகிஷ்கரிக்கப்பட்டால் அவர்களுக்கு நான் கூறும் யோசனை இது. ஆஸ்திரேலியாவில் நிலங்களை தரிசாக போடுவது போல இங்கும் ஹிந்துக்கள் தங்கள் நிலங்களை தரிசாகப் போட்டு விடலாம். அல்லது அதிகப்படியாக உள்ள நிலத்தை விட்டு விடலாம். எல்லாவற்றையும்விட நல்ல காரியம் யாதெனில் தாம் உபயோகிக்க முடியாத அளவு அதிகமாக உள்ள நிலத்தை யாரும் வைத்துக் கொள்ளாமல் இருப்பது தான். இந்த லட்சியத்தை அடைய எல்லோரும் முயல வேண்டும்.

(2) கேள்வி:—நீங்கள் இங்கே சென்ற மூன்று மாதகாலமாக வேலை செய்து வருகிறீர்கள். ஹிந்துக்களுடைய மனத்தில் தெளிவாகத் தெரியக் கூடிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறதா?

பதில்:—இந்தக் கேள்விக்கு இங்குள்ள ஹிந்துக்கள் தான் சரியானபடி பதில் சொல்ல முடியும். ஹிந்துக்கள் தற்சமயமேனும் ஓரளவு தங்கள்

கோழைத்தனத்தை விட்டு விட்டார்களென்றே நான் மனப்பால் குடிக்கின்றேன். நான் இங்கே தங்கியிருப்பதால் முஸ்லிம் நண்பர்களும் மனம் மாறி வருகிறார்களென்று தற்பெருமை கொள்கின்றேன்.

(3) கேள்வி :—தங்கள் யோசனைப்படியே பல ஊழியர்கள் கிராமங்களில் இருந்து கொண்டு சேவை செய்து வருகிறார்கள். அதனால் ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் ஏற்பட்ட நன்மையாது? நீங்கள் இங்கே தங்கி இராமல் அந்த ஊழியர்கள் மட்டும் தங்கி இருந்து வேலை செய்தால் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் நன்மை குறைந்து போய் இருக்குமா? உங்களுடைய ஊழியர்களால் ஏற்பட்டிருக்கும் நன்மை நீடித்து நிற்கக் கூடியதுதானா?

பதில்:—நான் மனத்தூய்மை உடையவனாகவும் எதையும் மறையாமல் உண்மையை கூறக்கூடியவனாகவும் இருந்தால் என்னுடைய வேலை நான் இறந்த பிற்பாடு கூட நீடித்து நிற்கும். பகிரங்கமாக நம்மைக் காட்டிக்கொள்வதற்கும் அந்தரங்கமாக நாம் நடப்பதற்கும் எவ்வித வேறுபாடும் இருக்கக் கூடாது. அதுபோல் என்னுடைய தோழர்கள் உள்ளும்புறமும் சுத்த முடையவர்களாகவும் சேவை செய்ய வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு வேலை செய்பவர்களாகவும் புகழை அடைய வேண்டுமென்ற மோஹம் இல்லாதவர்களாகவும் இருந்தால் அவர்கள் குறையாத உற்சாகத்தோடு வேலை செய்வார்கள். அவர்களுடைய வேலை நாளுக்கு நாள் அதிகமாக செழித்து ஓங்கும். எந்த நல்ல வேலையும் செய்தவர் இறந்து போனவுடன் நின்று போவதில்லை. உண்மையான வேலையானது செய்தவர்க்குப் பின்னும் நீடித்து நின்று செய்தவரை இறவாதவர் ஆக்கும்.

## கேள்வியும் பதிலும்

காந்தியடிகள் விஜயநகர் என்னும் கிராமத்தில் தங்கி இருந்தபொழுது தம்மிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு கீழ்க்கண்டவாறு பதிலுரைத்தார் :—

(1) கேள்வி :—சில ஊழியர்கள் சிறிது காலம் ஆனபிறகு அதிகார மோகம் உடையவர்களாக ஆகி விடுகிறார்கள் என்பது எங்களுடைய அனுபவம். இதைத் தடுத்து நம்முடைய ஸ்தாபனத்தின் ஜனநாயக லட்சணத்தை பாதுகாப்பது எப்படி? அவர்களுடன் ஒத்துழைக்காமல் இருக்கலாம். ஆனால் அப்படிச் செய்தால் ஸ்தாபனத்தின் வேலைக்கு இடையூறு உண்டாகி விடுகிறது.

பதில்:—இது உங்களுடைய அனுபவ மட்டுமல்ல எல்லோருடைய அனுபவமும் இதுதான். அதிகார மோகம் சகல மக்களிடமும் காணப்படுகிறது. சாகும் வரை நீடித்திருக்கிறது. ஆதலால் உங்களுக்கும் அந்த மோகம் உண்டாகக்கூடுமாதலால் உங்களால் மற்றவர்களைத் தடுப்பது கஷ்டமான காரியமே. முற்றிலும் அஹிம்சையான ஸ்தாபனம் ஒன்றை உலக முழுவதிலும் காண முடியாதிருப்பதால் அத்தகைய ஸ்தாபனத்தின் ஜன நாயக லட்சணம் எப்படி இருக்குமென்று நிச்சயமாகச் சொல்லமுடியாது. பரிபூரணமான அஹிம்சை ஏற்பட்டாலன்றி பரிபூர்ணமான ஜனநாயகம் ஏற்படமுடியாது.

(2) கேள்வி:—அநேகமாக எல்லா கிராமங்களிலும் கட்சி பேதங்கள் காணப்படுகின்றன. நாம் வேலை செய்யும்பொழுது கிராமத்தாருடைய உதவியை நாட ஆரம்பித்தால் உடனே நாம் அந்தக் கட்சிப் பேதங்களில் நாம் பிரியப்படா விட்டாலும் சிக்கிக்கொண்டு விடுகிறோம். சிக்கிக்கொள்ளாமல் தப்புவது எப்படி? உள்ளூரிலுள்ள இரண்டு கட்சியாருடைய உதவியையும் விட்டு விட்டு வெளியாருடைய உதவியைக் கொண்டு மட்டுமே வேலை செய்ய வேண்டுமா? ஆனால் அப்படிச் செய்தால் வெளியார் உதவி நின்று போனவுடன் வேலையும் நின்று விடுகிறதே. இந்த நிலைமையில் கிராமத்தாருடைய உதவியை பெறுவது எப்படி?

பதில் :—ஆம் இந்தியாவில் நகரங்களைப் போலவே கிராமங்களிலும் கட்சி பேதங்கள் காணப்படவே செய்கின்றன. அதைக் காண வருத்தமாய் இருக்கிறது. அதிகார மோகத்தின் காரணமாக கிராமத்தில் உள்ள ஜனங்கள் கிராமத்தின் நன்மையைக் கருதாமல் தங்கள் நன்மையை மட்டுமே கருதினால் அவர்களுடைய செயல் கிராமத்தின் முன்னேற்றத்திற்கு உதவி செய்வதற்குப் பதிலாக ஊறு செய்வதாகவே ஆகிவிடுகிறது. ஆயினும் நாம் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக கிராமத்தாருடைய உதவியை உபயோகித்துக் கொள்ள முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாக உபயோகித்துக்கொள்ள வேண்டும். நம்மிடம் அதிகார மோகம் இல்லாமல் இருந்தால் நாம் தவறு செய்ய மாட்டோம். ஆங்கிலம் கற்ற ஆண்களும் பெண்களும் இந்நாட்டின் முதுகு எலும்புபோல் உள்ள கிராமங்களை அலட்சியம் செய்துவிட்டார்கள். அது பெரும் குற்றமாகும். எந்தக் கிராமத்துக்குப் போனாலும் ஒரு யோக்கியமான ஊழியரைக் காணமுடியும். கிராமங்களில் சேவைசெய்யக் கூடியவர்கள் உண்டு என்று எண்ணாதவரையில் நாம் அத்தகைய ஊழியரைக்காண முடியாது. நாம் கிராமத்தில் காணப்படும் அதிகார மோகத்தில் சிக்கிக்கொள்ளலாகாது. எல்லாக்கட்சியாரிடமும் உதவியைப் பெற்று வந்தால் நாம் அதிகாரமோகத்தில் சிக்கிக்கொள்ள மாட்டோம். கிராமத்தார் உதவியை வேண்டாமென்று விட்டுவிட்டால் நாம் வெற்றிபெற மாட்டோம். இந்தக் கஷ்டத்தை உணர்ந்துதான் "ஒரு கிராமத்துக்கு ஒரு ஊழியர்" என்ற திட்டத்தை வகுத்திருக்கிறேன். வங்காளி பாஷை தெரியாத ஊழியராய் இருந்தால் மட்டும் வங்காளி ஒருவரை சேர்த்திருக்கிறேன். இந்த முறையால் நல்ல பலனே காண்கின்றேன். அதனால் உங்கள் அனுபவத்தை சரி என்று ஏற்றுக்கொள்ள முடியாது.

(3) கேள்வி :—இங்குள்ள நிலங்களை முஸ்லீம்கள் உழுவது வழக்கம். இப்பொழுது அவர்கள் உழ வருவதில்லை. அத்துடன் விவசாய கருவிகளையும் மாடுகளையும் இழந்து விட்டார்கள். அதனால் மிளகாய் எள் கடுகு போன்ற பயிர்கள் செய்யப்படாமல் நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. அடுத்த பருவத்திற்கு வயல்களை உழவேண்டியகாலம் நெருங்கி விட்டது. மேற்கண்டவைகளை பதினைந்து நாட்களுக்குள் பெறா விட்டால் இந்தப் பருவப் பயிரும் நஷ்டமாய் விடும்.

பதில் :—இது உண்மையானால் வருத்தம் தருவதேயாகும். இப்படிப்பட்ட நிலத்தை எல்லாம் பயிர் செய்வது நிலத்தின் சொந்தக்காரர்களுக்கு மட்டுமின்றி அரசாங்கத்துக்கும் நன்மை தருவதாகும். உணவுப்பொருள்களை உண்டாக்கும் விஷயத்தில் நிலச்சுவான்தார்களை விட அரசாங்கமே அதிகமாக கவலை கொள்ள வேண்டியதாகும். ஆதலால் நிலச்சுவான்தார்கள் இந்த உதவியை அரசாங்கத்திடம் கேட்கவேண்டும். அந்த நிலமெல்லாம் உபயோகமான முறையில் பயிராகும்படி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். கூலி வேலைசெய்பவர்களுக் கெல்லாம் கூலியை நிர்ணயித்து போதுமான கூலி கிடைக்கும்படி செய்வதும் அரசாங்கத்தின் கடமையாகும்.

தமிழ் ஹரிஜன்

பிப்ரவரி 16, ஞாயிறு 1947

## உழையாதவர்களுக்கு உணவு இல்லை

பிப்ரவரி மாதம் 8-ந்தேதி பிரசாத்பூர் என்னும் கிராமத்தில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்தியடிகளிடம் கீழ்க் கண்ட கேள்விகள் கேட்கப்பட்டன :—

"நீங்கள் எப்போதும் தானம் கொடுப்பதை கண்டித்து வந்திருக்கிறீர்கள். உணவுக்காக ஒவ்வொருவரும் சரீர வேலை செய்து தீர வேண்டும். அதற்கு விலக்கானவர் கிடையாது என்று போதித்து வந்திருக்கிறீர்கள். இந்தப் பகுதியில் சரீர வேலை செய்து பழக்கமில்லாதவர்கள் கலக சாலத்தில் தங்கள் சொத்து முழுவதையும் இழந்துவிட்டார்கள். அவர்களுக்கு நீங்கள் கூறும் யோசனை யாது? அவர்கள் பழையபடி வாழ்க்கை நடத்தக் கூடிய வசதிகள் உள்ள வேறு இடங்களுக்கு குடி போய்விட வேண்டுமா? அல்லது ஒவ்வொருவரும் சரீர வேலை செய்துதான் சாப்பிட வேண்டும் என்னும் லட்சியத்துக்கு ஏற்றவாறு தங்கள் வாழ்க்கை முறையை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டுமா? அப்படியானல் அவர்களுக்கு விசேஷமாக வேண்டியிருக்கும் திறமைகள் யாவை?"

காந்தியடிகள் கூறிய பதிலாவது :—

"ஆம் நான் தானம் கொடுப்பதை கண்டித்தும் சரீர வேலை செய்யாமல் சாப்பிடக்கூடாது என்று சொல்லியும் வந்திருக்கிறேன். ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டு போலீஸ் அதிகாரி ஒருவருடன் என்னிடம் வந்திருந்தார். அவர்கள் அகதிகளுக்கு ஆகாரம் கொடுப்பது சம்பந்தமாக என்னுடைய யோசனையைக் கேட்டார்கள். பாதைகளை செப்பனிடுவது வீடுகள் கட்டுவது, நிலங்களை சீர்செய்வது, போன்ற வேலைகளில் ஏதேனும் ஒன்றை செய்வோருக்கு உணவு கொடுக்கத் தீர்மானித்திருப்பதாக சொன்னர்கள். அந்த யோசனை எனக்குப் பிடித்திருக்கிறது. ஆனல் பெரிய லட்சியமாயினும் அனுஷ்டிக்கக்கூடியதாக செய்ய வேண்டும் என்னும் கருத்து உடையவனதலால் நான் அகதிகளிடம் இப்படி திடீர் என்றுசொல்லிவிடக்கூடாது என்று எண்ணுகிறேன். இந்த வேலைகளைத் தவிர இன்னும் பலவிதமான வேலைகளை சொல்ல வேண்டும். அத்துடன் எதை செய்வது என்று தீர்மானிக்க அவர்களுக்கு ஒரு மாதகாலம் கொடுக்கவும் வேண்டும். அவர்கள் அதற்குள் எதைச் செய்வது என்று தீர்மானிக்க வேண்டும் அல்லது வேறு எந்த வேலை தேவை என்று சொல்ல வேண்டும். அப்படி இரண்டில் ஒன்று சொல்லாமல் வேலை செய்ய உடம்பில் பலமிருந்தும் வேலை செய்ய மாட்டேனென்று மறுப்பவர்களுக்கு ஆகாரம் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட வேண்டும். இந்தவிதமாக நான் மேற்கண்ட உத்தியோகஸ்தரிடம் யோசனை கூறினேன்.

இந்த விஷயத்தில் அகதிகளும் அவர்களுடைய நண்பர்களும் அரசாங்கத்திற்கு பூர்ண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். சரீர வேலை எதுவும் செய்யாமல் சாப்பாடு கிடைக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது தவருகும்.

ஜனங்கள் தங்கள் வீடுகளை விட்டு போய்விட வேண்டுமென்று நான் ஒரு நாளும் யோசனை கூற முடியாது. ஒரே ஒரு ஹிந்துவாக தனித்து வாழ வேண்டி இருந்தாலும் தைரியமாக வாழ வேண்டுமென்றே நான் கூறுவேன். முஸ்லிம்கள் அவருக்கு பரிபூர்ண பாதுகாவலை அளிக்க வேண்டும். அவர் இஷ்டம் போல் கடவுளைத் தொழ அவருக்குள்ள உரிமையை கொடுக்க வேண்டும். சூதினல் வரும் பணத்தை நியாயமாக சம்பாதித்த பணமாக எண்ண மாட்டேன். தீய வழக்கங்களை விட்டுவிட முடியாதென்று சொல்லுவதையும் நான் ஏற்றுக் கொள்ள முடியாது. ஒவ்வொருவரும் நெற்றி வேர்வை நிலத்தில் விழப்பாடுபட்டால் இந்த பூலோகம் சொர்க்க லோகமாகி விடும். ஒவ்வொருவரும் தம்முடைய உணவுக்காக சரீர வேலை செய்தால் கவிஞர்களும் டாக்டர்களும் வக்கீல்களும் இவர்களைப் போன்றவர்களும் மனித ஜாதிக்கு சேவை செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் இலவசமாகவே சேவை செய்வார்கள். அதனல் அவர்களுடைய சேவை இப்பொழுது உள்ளதைவிட சிறந்ததாகவும் அதிகமாகவும் இருக்கும்."

## ஜாதி வேண்டாம்

அஸ்ஸாம் மாகாணத்தில் மணிபுரி என்று ஒரு ஜாதியார் இருக்கிருர்கள் அவர்களுடைய ஜனத்தொகை 2 லட்சம். அவர்களுக்கு சிறுபான்மையோர்க்குள்ள பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கேட்பதற்காக ஒரு தூது கோஷ்டியார் காந்தியடிகளை கபிலதலி என்னும் கிராமத்தில் பிப்ரவரி 11-ந் தேதி பேட்டிகண்டார்கள். அவர்களிடம் காந்தியடிகள் கூறியதாவது :—

"நான் 45 வஷங்களுக்கு முன் லண்டனில் படித்துக்கொண்டிருந்த காலத்திலேயே மணிபுரி ஜாதியாருடைய வீரத்தைப் பற்றி படித்திருக்கிறேன். அஸ்ஸாமிலுள்ள ஜாதிஹிந்துக்கள் மணிபுரி ஜாதியாரை தங்களில் ஒரு பகுதியினராக கருதிய போதிலும் அவர்கள் தனிபாஷையும் தனிப்பண்பாடும் உள்ள மணிபுரி ஜாதியாருடைய நன்மையை கவனிக்கவில்லை என்றும் தங்களுக்கு ஓட்டு பலம் அதிகரிப்பதற்காகவே மணிபுரி ஜாதியாரை உபயோகித்துக்கொள்கிருர்கள் என்றும் ஆதலால் மணிபுரி ஜாதியாருடைய நலன்களைப் பாதுகாக்க ஏதேனும் ஒரு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் நீங்கள் கூறுகிறீர்கள்.

இது விஷயமாக நான் கூற விரும்புவதெல்லாம் ஹிந்து மதம் சாகாமல் இருக்க வேண்டுமானல் ஜாதிகளை எல்லாம் ஒழித்துவிட வேண்டுமென்பதே யாகும். நான் எந்த ஜாதியைச் சேர்ந்தவன் என்பதை வெகுகாலத்திற்கு முன்னதாகவே மறந்து போய்விட்டேன். ஆதலால் தோட்டி என்று கூறுவதிலும் தோட்டியைப் போல் நடந்து கொள்வதிலும் சந்தோஷமடைகின்றேன். இயற்கைக்கு விரோதமான பிரிவினைகளில் எனக்கு நம்பிக்கை கிடையாது.

ஜாதி ஹிந்து என்பதற்கு பிராமணன் க்ஷத்திரியன் வைசியன் என்று பொருள் கூறினல் இந்த மூன்று ஜாதியாரும் தலை தூக்க முடியாத அளவு சிறுபான்மையோராவர். பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறி சுதந்திரம் ஏற்படும் காலத்தில் உயர்ந்த ஜாதியார் என்று சொல்லிக்கொள்ள முடியாதபடி இந்த மூன்று ஜாதியாரும் ஒழிந்து போவார்கள். ஜாதி வித்தியாசங்களெல்லாம் காணப்பட மாட்டா. ஒடுக்கப்பட்ட ஜாதியார் தங்கள் உரிமையை பெற்றுவிடுவார்கள்."

## தூதுகோஷ்டி திட்டம்

காந்தியடிகள் பிப்ரவரி மாதம் 11-ந்தேதி விஜய நகர் என்ற கிராமத்தில் செய்த பிரார்த்தனை பிரசங்கத்தில் கீழ்க் கண்டவாறு கூறினர் :—

"பிரிட்டிஷ் மந்திரி தூதுகோஷ்டியாருடைய திட்டம் இரண்டு பொருள் கொடுக்கக்கூடியதாக இருப்பதினாலேயே காங்கிரஸுக்கும் லீகுக்கும் அதாவது ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் வேற்றுமை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் தூதுகோஷ்டியார் சரியான ஒரு யோசனையையே கூறினார்கள் என்றும் அவர்கள் அந்தரங்க சுத்தியாகவே நடந்துகொண்டார்கள் என்றுமே நான் கருதுகின்றேன். அவர்களுடைய திட்டத்தின் சிறப்பெல்லாம் அதில் எவ்வித மான நிர்ப்பந்தமும் ஏற்படுத்தாமல் இருப்பதுதான். எந்தக் கட்சியும் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடலாம். ஆனால் ஏற்றுக்கொண்டால் அதன்படி நடந்து தீர வேண்டும். கிழக்கே அஸாமும் மேற்கே பலுசிஸ்தானும் தொகுதிமுறையை ஏற்றுக்கொள்ளாமல் நிராகரித்துவிட்டால் யாரும் அவர்களை ஏற்றுக்கொள்ளும்படி கட்டாயப்படுத்த முடியாது. ஒரு வேளை நீங்கள் தூதுகோஷ்டி திட்டத்தை நம்மை ஏமாற்றி சிக்க வைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு பொறி என்று கூறலாம். அப்படியானால் காங்கிரஸும் முஸ்லிம்லீகும் அந்தப் பொறியில் ஏன் விழ வேண்டும்?"

## எனது நோக்கம்

காந்தியடிகள் விஜயநகர் என்னும் கிராமத்தில் தங்கி இருந்த பொழுது சில முஸ்லீம்கள் வந்து கீழ்க்கண்டவாறு கூறினார்கள்:—

"நீங்கள் கிழக்கு வங்காளத்தில் தொடர்ந்து வெகு நாட்களாக தங்கிவருவதால் உலகத்திலுள்ள சகல மக்களும் நவகாளியில் இன்னும் அட்டூழியங்கள் நடப்பதாக எண்ண ஏதுவாய் இருக்கிறது. ஆனால் இப்பொழுது சிலகாலமாக முஸ்லீம்கள் எந்தவிதமான அக்கிரமங்களும் செய்யவில்லை அல்லவா ?"

பதில் : "பாரபட்மில்லாமல் கவனிப்பவர்கள் இந்தவிதமாக தவறான முடிவு செய்ய மாட்டார்கள். உங்களுக்கு சேவை செய்வதற்காகவே நவகாளியில் தங்கியிருக்கிறேன். என்னுடைய முயற்சிகள் முடிந்த பிறகு இவருக்கு அஹிம்சையைப் பற்றி ஒன்றும் தெரியாது என்று கூறக்கூடிய நிலைமை ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஆயினும் ஹிந்துக்களும் முஸ்லீம்களும் தங்களிடையே மனப்பூர்வமான நட்பு உண்டாகி விட்டதாக நிரூபிப்பார்களானால் நான் இங்கே தங்கி இருக்க மாட்டேன். ஆனால் எந்த நிலைமையை விரும்புகிறேனோ அந்த நிலைமை உண்டாகவில்லை என்று காட்டக்கூடிய ஆதாரங்கள் இருக்கின்றன என்று நான் வருத்தத்துடன் உங்களுக்குக் கூறுகிறேன்."

## தர்மகர்த்தா முறை

காந்தியடிகள் சத்காலியா என்னும் கிராமத்தில் இருந்த பொழுது கீழ்கண்டவாறு கூறினார் :—

"ஒருவருடைய ஒழுக்கத்திற்கும் அவருடைய பொதுஜன சேவைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும் ஒழுக்கத்தால் பொதுஜன சேவை பாதிக்கப்படாதென்றும் எண்ணுகிறார்கள். நான் அவ்விதமாக ஒரு பொழுதும் எண்ணியதில்லை. ஒழுக்கமில்லாமல் இருந்து கொண்டு பயன் தரக்கூடிய விதத்தில் பொதுஜன சேவை செய்ய முடியுமென்று எனக்குத் தோன்ற வில்லை. ஒழுக்கத்தையும், பொதுஜன சேவையையும் ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாததுபோல் பிரித்து வைப்பதே உலகத்தில் காணப்படும் பல கேடுகளுக்கு காரணமாகும். நான் அஹிம்ஸையை பரிபூரணமான சோதனைக்கு உட்படுத்தி வருகிறேன். இந்த விஷயத்தில் என்னுடைய எல்லா செயல்களையும் வைததே கடவுளும் மக்களும் என்னுடைய வெற்றி தோல்வியை மதிப்பிட வேண்டும் என்று விரும்புகிறேன். அஹிம்ஸையாக வாழ்வதென்பது தனி நபருக்கானாலும் சமூக முழுவதற்குமானாலும் ஆத்ம சோதனை செய்வதும் ஆத்மாவை சுத்தப்படுத்துவதுமே ஆகும்."

அதன் பின் தர்மகர்த்தா முறையைப் பற்றி சில வார்த்தைகள் கூறினார். அதன் மீது எழுந்த கேள்விகளுக்கு கீழ்கண்டவாறு பதில் கூறினார் :—

கேள்வி : பலாத்காரத்தின் மூலமாகவே பெறக்கூடிய எதையும் அஹிம்ஸை மூலமாக பாது காத்துக் கொள்ள முடியுமா ?

பதில் : பலாத்காரத்தின் மூலமாக பெற்றவைகளை அஹிம்ஸை மூலமாக காப்பாற்றிக்கொள்ள முடியாது. அஹிம்ஸையை அனுஷ்டிப்பதானால் தவறான வழியில் பெற்றவைகளை விட்டு விட வேண்டும்.

கேள்வி : நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ பலாத்காரத்தை உபயோகியாமல் பொருளைச் சேகரிக்க முடியுமா ?

பதில் : பலாத்காரத்தை உபயோகியாமல் தனி மனிதர்கள் பணத்தை குவிக்க முடியாது. ஆனால் அரசாங்கமானது அஹிம்ஸையை உபயோகித்து பணத்தைக் குவிக்க முடியும். அப்படிச் செய்வது அவசியமானதும் விரும்பத்தக்கது மாகும்.

கேள்வி : மனிதன் பொருட்செல்வத்தையும் அருட்செல்வத்தையும் பிறருதவியின் மூலமாகவே சேகரிக்கிறான். ஆதலால் அந்தச் செல்வத்தில் எதையேனும் தன் சொந்த உபயோகத்திற்காக உபயோகித்துக் கொள்ள அவனுக்கு சன்மார்க்க ரீதியாக உரிமை உண்டா ?

பதில் : கிடையாது.

கேள்வி : தர்மகர்த்தாவுக்கு வாரிஸை எவ்விதம் ஏற்படுத்துவது ? வாரிஸின் பெயரை குறிப்பிட்டுச் சொல்ல மட்டும் தான் அவருக்கு உரிமை உண்டோ? கடைசியாக தீர்மானிக்க வேண்டிய உரிமை அரசாங்கத்திற்குத் தானே ?

பதில் : சொந்தக்காரர் முதல் தர்மகர்த்தா ஆகிறார். அவர் வாரிஸின் பெயரைச் சொல்வார். கடைசியில் அரசாங்கம் தீர்மானம் செய்யும். இந்த ஏற்பாட்டால் அவரும் அரசாங்கமும் தவறு செய்யாமல் காக்கப்படுவார்கள்.

கேள்வி : சொத்தின் சொந்தக்காரர்கள் அதன் தர்மகர்த்தர்களாக இருக்க ஒப்புக்கொண்டு தனிச் சொத்தை பொதுவுடைமையாக செய்வார்களானால் அப்பொழுது அந்தச் சொத்து பலாத்காரத்தை உபயோகிக்கும் அரசாங்கத்திற்குச் சொந்தமாயிருக்குமா ? அல்லது அரசாங்கம் செய்யும் சட்டங்களின் படி அதிகாரம் பெற்ற போதிலும் தாங்களாக சேர்ந்து நடத்தும் கிராமப் பஞ்சாயத்திற்கும் முனிஸிபாலிட்டிற்கும் சொந்தமாயிருக்குமா ?

பதில் : இந்தக் கேள்வி கேட்பவர் மனதில் குழப்பமேற் பட்டிருப்பதாகத் தெரிகிறது. தர்மகர்த்தாவாக இருந்துகொண்டு பொதுவுடமை ஆக்கினாலும் சட்டப்படி தர்மகர்த்தாவே சொத்தின் சொந்தக்காரராக இருப்பார். சொத்தை அரசாங்கம் பறிமுதல் செய்தால் சொத்தின் சொந்தக்காரருடைய திறமையை இழந்து விடும்படி நேரிடுகிறது. அதைத்தடுப்பதற் காகவே தர்மகர்த்தா முறையை ஏற்படுத்த வேண்டியதாயிருக்கிறது. அத்துடன் அரசாங்கமானது பலாத்காரத்தை அடிப்படையாக கொண்டாதகவே எப்பொழுதும் இருக்க

வேண்டியதில்லை. அத்துடன் தர்மகர்த்தா முறையை அமல் நடத்த வேண்டுமானல் அரசாங்கத்தின் அடிப்படைத் தத்துவம் அஹிம்சை யாகவே இருக்க வேண்டியது அவசியமாகும்.

## மற்று மொரு புகழ்

பொருளாதார விஷயங்களில் நீண்ட காலத் திட்டமும் குறுகிய காலத் திட்டமும் ஒன்ருே டொன்று பிணைந்து வேலை செய்தால்தான் திருப்திகரமாக வேலை நடைபெறும். தச்சருக்கு நாற்காலி செய்வதற்கு ஆறின மரம் வேண்டுமானல் சர்க்காரின் காடு சம்மந்தமான கொள்கை அதற் கேற்றதாக வகுக்கப்பட வேண்டும். விவசாயிக்கு வயில்களுக்குத் தண்ணீர் வேண்டுமானல் அரசாங்கம் அதற்கு வேண்டிய நீண்ட காலப் பாசனத் திட்டங்களை ஏற்படுத்த வேண்டும். இரண்டு திட்டங்களும் ஒன்றுக்கொன்று உதவி செய்வன. ஆனல் குறுகிய காலத் திட்டத்தின் அவசியத்தைப் பொறுத்தே நீண்டகாலத் திட்டம் அமைக்கப் படும். குறுகிய காலப் பொருளாதார அவசியங்களுக்குத் தக்க வாறு நீண்ட காலத் திட்டங்களை அமைப்பது அரசாங்கத்தின் கடமையாகும். இரண்டு திட்டங்களும் ஒன்றுக்கொன்று பொருந்தாத விதத்தில் ஏற்படுத்தப் பட்டால் எல்லாம் வியர்த்தமாகவே போகும். நீர் பாய்சுவதற்கு வயல்களில்லாத இடத்தில் நீர்ப்பாசனத் திட்டம் ஏற்படுத்துவது முட்டாள்தனம் அல்லவா?

மெஷின்கள் கண்டு பிடிப்பதற்கு முன்னல் இங்கிலாந்தில் குதிரையைக் கொண்டே காரியங்கள் செய்து வந்தார்கள். அதுவே உழுவதற்கும் சவாரி செய்வதற்கும் வண்டி யிழுப்பதற்கும் உபயோகப் படுத்தப்பட்டு வந்தது. அந்தக் காலத்தில் இப்பொழுது காணப்படும் ஜனநாயக அரசாங்கம் கிடையாது. ஜமீன்தார்களே நிருவகித்து வந்தார்கள். ஆதலால் அவர்களே ஜனங்களுக்கு வேண்டிய குதிரைகளை உற்பத்தி செய்யும் வேலையில் ஈடுபட்டார்கள். நல்ல குதிரைகள் உண்டாவதற்காகவும் நல்ல குதிரைகளை உண்டாக்குகிறவர்களுக்கு வெகுமதி அளிப்பதற்காகவும் குதிரைப் பந்தயம் விடும் வழக்கம் ஏற்பட்டது.

மெஷின் கண்டு பிடித்த பிறகு குதிரைக்குப் பதில் நிலக்கரியும் எண்ணெய்யும் உபயோகப்படுத்தப் படுகின்றன. இப்பொழுது உழவு முதலிய காரியங்களுக்குக் குதரைகள் தேவை யில்லை. ஆனல் நீண்ட காலத் திட்டமாகிய குதிரை வளர்த்தலும் குதிரைப் பந்தயம் விடுதலும் இன்னும் இருந்து கொண்டிருக்கின்றன. இப்பொழுது அவை சூதாடுகிறவர்களுக்கும் பணத்தைப் பாழாக்குகிறவர்களுக்குமே உபயோகமா யிருக்கின்றன.

இப்படி அனுவசியமாக எஞ்சி நிற்கும் குதிரைப் பந்தயத்தால் ஆயிரக் கணக்கான குமாஸ்தாக்களும் சிறு வியாபாரிகளும் கெட்டொழிகிருர்கள். குதிரைப் பந்தயத்தை சமூகமாகிய உடலில் ஏற்பட்டிருக்கும் பிளவையாகவே கருத வேண்டும். இந்த நோய் நம்முடைய தேசத்துக்குள்ளும் புகுந்து விட்டது. நம்முடைய அரசர்களிலும் செல்வந்தர்களிலும் பலர் கோடிக் கணக்கான பணத்தைக் குதிரைப் பந்தயத்தில் பாழாக்கி வருகிருர்கள்.

நம் நாட்டிலுள்ள சர்க்கார் எப்போதும் பணத்தைப் பாழாக்கியே வருகின்றது. அதனல் அது ஒழிந்து போன பொருளாதாரத் திட்டத்தின் அர்த்தமற்றச் சின்னமாக நிற்கும் குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்குப் பதிலாக அதைத் தனக்குப் பணந்தேடும் சாதனமாகச் செய்து கொண்டிருக்கிறது. பம்பாய் சர்க்காருக்கு ஒரு கோடி ரூபாயும் வங்காள சர்க்காருக்கு முக்கால் கோடி ரூபாயும் குதிரைப் பந்தய வரியால் கிடைக்கிறது. பண ஆசையில்லாத புத்தியுள்ள அரசாங்கங்கள் இந்தக் கேவலமான தொழிலை நிறுத்திவிட வேண்டிய காலம் வந்து விட்டது.

குதிரைப் பந்தயம் நடக்கும் பொழுது பந்தயம் வைத்து சூதாடுவதைத் தடுக்கும் பொருட்டு சட்டம் செய்து சென்னை மந்திரி சபையார் மற்ற அரசாங்கங்களுக்கு வழி காட்டுகிருர்கள். வண்டிகளுக்கு வேண்டிய குதிரை தினுசுகள் இனிமேல் தான் உற்பத்தி செய்யப்பட வேண்டும். குதிரைப் பந்தயத்திற்காக உற்பத்தி செய்யப்படும் குதிரைத் தினுசுகள் சாதாரண மனிதனுக்கு எந்த விதத்திலும் பயன் படுவதாக இல்லை. ஆதலால் குதிரைப் பந்தயத்தை அறவே ஒழித்துவிட வேண்டியது அவசியமாகும். மற்ற சர்க்கார்கள் சென்னை சர்க்காரைப் பின்பற்றி நடக்கும் என்று நம்புகிறோம்.

நம்முடைய தேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு இன்றியமையாது வேண்டப்படுவது பசு முதலியன ஆகும். ஆதலால் ஆடு மாடு வளர்த்தல் கோழி வளர்த்தல் முதலிய நீண்டகாலத் திட்டங்கள் அவசியமாகும். அதனல் குதிரை உற்பத்தியில் வியர்த்தமாகும் சக்திகளை எல்லாம் இந்தக் காரியங்களில் உபயோகித்தால் நாட்டின் பொருளாதாரம் நல்லவிதமாக விருத்தி அடையும்.

ஜே. ஸி. குமரப்பா.

## பிறர்க்கு நன்மை நமக்குத் தீமை

பிறர் கண்ணிலுள்ள தூசியைப் பார்ப்பது எளிது, நம்முடைய கண்ணிலுள்ள உத்தரத்தைக் காண்பது கஷ்டம். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் உற்பத்தியாகும் பொருள்களுக்குப் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளில் காட்டப்படும் சலுகையை நீக்கிவிட வேண்டும் என்று அமெரிக்கா தேசம் பிரிட்டனுக்கு யோசனை கூறியிருப்பதாகத் தெரிகிறது. இந்தியா மந்திரியாகயிருந்த அமெரி அது கூடாதென்று கூறுகிருர். அந்தச் சலுகையை நீக்கி விட்டால் பிரிட்டனில் உற்பத்தியாகும் பொருள்கள் மற்ற நாட்டு பொருள்களோடு போட்டி போடவும் விற்பனை ஆகவும் முடியாது என்று வெட்கமின்றி கூறுகிருர். இப்படி அவர் கூறுவது பிரிட்டிஷாருக்குப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய திறமை குறைந்து விட்டது என்பதை ஒப்புக் கொள்வதாகு மல்லவா? இந்த நிலைமையில் பிரிட்டிஷ் பொருள்களுக்குச் சலுகை வேண்டுமென்று கூறுவது சாம்ராஜ்யத்திலுள்ள நாடுகளைக் கெடுப்பதாகு மல்லவா? இந்தக் கொள்கை இந்தியாவுக்குக் கேடு செய்வதாகு மல்லவா?

ஆனல் ஐக்கிய தேச சங்கம் ஏற்படுத்திய வியாபாரக் கமிட்டியானது இந்த மாதிரி சலுகை காட்டுவது அதிக வருமானமுள்ள தேசங்களுக்குக் கூட கேடு செய்யுமென்று கூறுகின்றது. அதனல் குறைந்த வருமானமுள்ள நம்முடைய தேசம் எல்லா நாட்டுப் பொருள்களுக்கும் இடங் கொடாமல் நம்முடைய நாட்டில் சிசுப் பருவத்திலுள்ள கைத்தொழில்களுக்குப் பாதுகாப்பளிப்பது அவசியமாகும். மேற்கூறிய சர்வதேச சங்கம் சலுகை காட்டாமல் எல்லா தேசப் பொருள்களுக்கும் இடங்கொடுக்க வேண்டுமென்று கூறுவது சுயநலமான காரியமே யாகும். ஐக்கிய தேச சங்கமானது இப்படி நடந்து கொள்ளுமானல் இந்தியாவைப்போல் ஒடுக்கப்பட்டுள்ள தேசங்கள் எவ்வாறு அதனிடம் நியாயத்தை எதிர்பார்க்க முடியும்?

ஜே. ஸி. குமரப்பா.

ஆணையிட ஆசைப்படுவது தீயது, அதனினும் தீயது ஆணைக்குப் பணிவது—கிளிப்போர்டு

## ஆரோக்கியத்தை அதிகரிக்கும் முறை

ஆரோக்கியமே மனிதனுடைய தலைசிறந்த செல்வம். ஜனங்களுடைய ஆரோக்கியத்தை அலட்சியம் செய்யும் அரசாங்கம் அழிந்து போகும். இப்பொழுது சுதந்திரம் உதயமாகி வருவதால் எல்லா விதத்திலும் நம்முடைய நாடு இப்பொழுதுள்ள தாழ்ந்த நிலையிலிருந்து உயரும்படியாகச் செய்ய வேண்டியது நம்முடைய பிரதானமான கடமையாகும்.

சென்ற யுத்தமானது இந்தியாவில் காணப்படும் ஆரோக்கியக்குறைவிற்கு மூலகாரணம் இதுவென்று சந்தேகமறத் தெளிவாக்கி விட்டது. தரித்திரமும் போஷணைக் குறைவும் முக்கியமான காரணங்கள். அழுக்கும் அசுத்தமும் தொத்து நோய்களைப் பரவச் செய்கின்றன. அறியாமையும் அலட்சியமும் இந்தக் கஷ்டங்களை அதிகப்படுத்துகின்றன. சாதாரண காலத்தில் பட்டாளத்தில் சேர்த்துக்கொள்ள மறுக்கப்படுகிறவர்களெல்லாம் சென்ற யுத்த சமயத்தில் சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள். ராணுவ முகாம்களில் சில வாரங்கள் வைத்து சரியான உணவு கொடுத்த உடனே அவர்கள் வேண்டிய பலத்தையும் ஆரோக்கியத்தையும் அடைந்துவிட்டார்கள். சென்ற யுத்தத்தில் இந்திய வீரர்கள் கஷ்டங்களைப் பொறுப்பதிலும் கட்டுப்பாட்டை நிறைவேற்றுவதிலும் புகழ் பெற்றனர்கள். பல வருஷங்களாகப் பயிற்சியும் அனுபவமும்பெற்ற மேனாட்டு வீரர்களுக்கு எவ்விதத்திலும் குறைந்தவர்களில்லை என்று இந்திய வீரர்கள் நிரூபித்துக் காட்டி விட்டார்கள். ஆகவே பணமும் முயற்சியுமிருக்குமானால் சாதாரண ஜனங்களையும் அந்த விதமாக ஆரோக்கியமும் பலமும் உடையவர்களாகச் செய்து விட முடியும்.

இந்தியாவில் சராசரி வயது 23. இங்கிலாந்திலோ 61. இந்தியாவின் சிசு மரணம் சில இடங்களில் 1000-க்கு 267. ஆனால் இங்கிலாந்தில் 60-ம் நியூஜீலந்தில் 30-ம் தான். இந்திய மக்களின் சராசரி நிறையும் உயரமும் மார்பு அளவும் மற்ற தேசங்களில் உள்ளதைவிட மிகக் குறைவாகும். பீமசேனர்களை உண்டாக்க விரும்பாவிட்டாலும் நாம் அடிக்கடி சராசரி அளவுகளை எடுத்துப் பார்க்க வேண்டியது அவசியமே யாகும். அதற்காக ஒரு மத்திய ஸ்தாபனத்தை ஏற்படுத்தி சாதாரணமாக ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய உயரம், நிறை, மார்பு விரிவு, இரத்த அழுக்கம், இரத்தத்தின் தன்மை, உணவின் அளவு முதலியவைகளை நிர்ணயிக்க வேண்டும். இதற்குப் பெரிய சோதனை சாலைகள் அவசியமாகும். அவைகளைப் பெரிய நகரங்களில்தான் அமைக்க முடியும். மனிதன் ஆரோக்கியமாக இருந்தால் மட்டும் போதாது. தன்னுடைய வேலையில் திறமையுடையவனாகவும் தன்னையும் தன்னுடைய குடும்பத்தையும் பாதுகாத்துக்கொள்ளக்கூடியவனாகவும் சமூகத்திற்கு உயர்ந்த சேவை செய்யக் கூடியவனாகவும் இருக்க வேண்டும். இதற்கான சோதனை சாலைகளை ராஜதானி நகரங்களிலும் ஜில்லாத் தலைநகரங்களிலும் ஏற்படுத்த வேண்டும்.

கிராமங்களும் சிறிய பட்டணங்களும் இந்த விஷயங்களில் ஒத்துழைத்து தங்கள் ஊரிலுள்ள ஜனங்களுடைய தேகநிலை உயர்ந்து வருகிறதா என்பதை கவனித்து வரவேண்டும். இதற்காக கிராமத்திலுள்ள உபாத்தியாயரிடம் அளக்கும் டேப் ஒன்று கொடுத்து விட்டால் போதும். கிராமத்திலேயுள்ள தராசைக் கொண்டு நிறையைக் கண்டு கொள்ளலாம். உயரத்தையும் நிறையையும் மார்பின் விரிவையும் அளப்பதின் மூலம் கிராம வாசிகளிடையே ஆரோக்கிய உணர்ச்சியை எழுப்பி விடமுடியும். தேகப் பயிற்சி சங்கங்கள் கிராமங்களிலும் பட்டணங்களிலும் தேக பலத்தை நிர்ணயிக்கக் கூடிய போட்டிகளை ஏற்படுத்தி ஜனங்களுக்கு உற்சாகத்தை உண்டாக்கலாம்.

நகரங்களில் ஆரோக்கிய அபிவிருத்தி நிலையங்கள் ஏற்படுத்தி பள்ளிக்கூடங்களில் குழந்தைகளை வைத்திய பரிசோதனை செய்யவும், பிரசவ வசதி தரவும் ஏற்பாடு செய்ய வேண்டும். நகரங்களிலுள்ள ஆரோக்கிய நிலையங்கள் கிராமங்களுக்குத் தங்கள் சிப்பந்திகளை அனுப்பிக் கிராம வாசிகளுடைய ஆரோக்கியத்தைப் பற்றிய புள்ளி விபரங்களைச் சேகரிக்க வேண்டும். இப்படிப் பல வழிகளிலும் சேகரிக்கப்படும் புள்ளி விபரங்களோடு மற்ற நாடுகளின் புள்ளி விபரங்களை ஒப்பிட்டுப் பார்த்து ஆரோக்கிய நிலையைக் கண்டு பிடிக்கவும் நிர்ணயிக்கவும் வேண்டும். இந்த நோக்கத்தோடு குஜராத் ஆராய்ச்சி சங்கத்தார் ஆரோக்கிய நிலயத்தை பம்பாயில் குயின்ஸ் ரோடில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அங்கே இலவசமாக வயித்திய பரிசோதனை செய்து யோசனை கூறப்படுகிறது. இது போன்ற ஸ்தாபனங்கள் நாடெங்கும் ஏற்பட வேண்டுமென்று விரும்புகிறோம்.

பி. ஜி. ஷா.

## ஒரிஸ்ஸாவின் தற்கொலை

நம்முடைய தரித்திரமான மாகாணங்களில் ஒரிஸ்ஸாவும் ஒன்று. சென்ற யுத்தத்தின் காரணமாக அது முன்னிலும் அதிகமான தரித்திரத்தை அடைந்திருக்கிறது. தரித்திரம் என்று பேசும் பொழுது சாதாரணமான விவசாயியையும் கிராமவாசியையுமே எண்ணுகின்றோம். ஒரே இடத்தில் பொருள்களைச் செய்து குவிப்பதால் பணமுடையவர்களுக்கே லாபம் கிடைக்கிறது என்பதையும், வேலையில்லாமை உண்டாகி பண மில்லாதவர்களுக்குக் கஷ்டங்கள் உண்டாகின்றன என்பதையும் இந்தக் காலத்தில் விளக்கி விவரிக்க வேண்டிய அவசிய மில்லை. ஆதலால் தரித்திரத்தையும் வேலையில்லாமையையும் போக்குவதற்காக நாம் அதிகமான ஜனங்களுக்கு வேலை கொடுத்து தேசத்தில் உற்பத்தியாகும் செல்வத்தை எல்லோருக்கும் கிடைக்கும்படி வினியோகிக்கக்கூடிய கைத்தொழில்களைப் பரவும்படி செய்ய வேண்டியது அவசியமாகும். அத்தகைய கைத்தொழிலாகும் கதர் உற்பத்தி. அது துணிப்பஞ்சத்தை அதி சீக்கிரத்தில் நீக்கிவிடும்.

ஒரிஸ்ஸா அரசாங்கத்தார் சரியானபடி யோசனை செய்து பார்க்காமல் மாகாணங்களுக்கு மில் கதிர்கள் கொடுக்கும் திட்டத்தை எல்லோர்க்கும் முன்பாக ஏற்றுக்கொண்டு விட்டார்கள். அதனால் புதிதாக ஆரம்பிக்கப்படும் "ஒரிஸ்ஸா துணிமில்" என்னும் யந்திரசாலைக்கு 25-ஆயிரம் முரட்டு நூல் கதிர்களும் 19-ஆயிரம் மெல்லிய நூல் கதிர்களும் பெற்று விட்டார்கள். கட்டாக் நகரத்தில் கட்டடம் கட்டுவதற்கு வேண்டிய இரும்பு, சிமிட்டி, நிலக்கரி போன்ற பொருள்களுக்காக "பெர்மிட்" களுக்குக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் கம்பனி ஆரம்பிப்பதற்கு எல்லாம் ஒத்து வந்தால்கூட இன்னும் மூன்று வருஷகாலம் பிடிக்கும். அதற்கிடையில் துணிப் பஞ்சம் இன்னும் அதிகக் கேவலமான நிலைமை அடைந்து விடும். மில் வேலை செய்ய ஆரம்பிக்கும் சமயத்தில் அமெரிக்காவும் பிரிட்டனும் மற்ற நாடுகளும் தங்கள் ஏற்றுமதி வியாபாரத்தைப் பெருக்குவதிலேயே கண்ணும் கருத்துமாயிருப்பதால் நம்முடைய தேசத்தில் தங்கள் பொருள்களை விற்பதற்கு வேண்டிய நிலைமையை உறுதிசெய்து கொண்டு விடுவார்கள். அப்பொழுது "ஒரிஸ்ஸா துணி மில்" அவர்களை விரட்டி விட முடியுமா?

ஒரிஸ்ஸா சர்க்கார் இப்படிக் குறுகிய திருஷ்டியோடு, ஏழைகளுக்கு இப்பொழுதுள்ளதைவிட

அதிகக் கஷ்டம் தரக்கூடிய மில் விஸ்தரிப்புத் திட்டத்தை ஏற்றுக் கொண்டிருப்பதைக் காண மிகுந்த வருத்தமாயிருக்கிறது.

ஜே. ஸி. குமரப்பா.

## கொள்ளையில் ஒரு பங்கு

நாதிர்ஷா என்பவன் கொள்ளையடிப்பதற்காக இந்தியா மீது படையெடுத்து வந்தான். அவன் வந்து ஏராளமான தங்கத்தையும் நகைகளையும் நவரத்தினங்களையும் கொண்டுபோனான். ஆனால் இந்தக் காலத்தில் கொள்ளையடிப்பவர்கள் விரும்புவது அத்தகைய பொருள்களை அன்று. அவர்கள் உற்பத்தி சாதனங்களையும் கைத்தொழிலுக்கு வேண்டிய விளைபொருள்களையும் செய்த பொருள்களை விற்பதற்கு வேண்டிய சந்தைகளையுமே விரும்புகிறார்கள். இந்த விதமான கொள்ளையில் நாட்டமுடையவர்களாக இருப்பதால் தான் யுத்தங்கள் ஏற்பட்டு வருகின்றன.

முதல் உலக மகா யுத்தம் நடந்தபின் அதில் வெற்றி பெற்றவர்கள் தோற்றுப் போன ஜெர்மனியிடமிருந்து அதன் குடியேற்ற நாடுகளைப் பிடுங்கிக் கொண்டதோடு யுத்தத்தால் ஏற்படும் சேதங்களுக்கு நஷ்டயீடு தரும்படியும் கேட்டார்கள்.

இப்பொழுது மறுபடியும் ஜெர்மனியே தோல்வி அடைந்திருக்கிறது. சர்வதேசக் கழுகுகள் பிணங் கிடக்கும் இடத்தில் கும்பலாகக் கூடியிருக்கின்றன. வெற்றி பெற்ற தேசங்களில் பிரதானமானவற்றின் பிரதிநிதிகள் சபையார் ஜெர்மனியின் கைத்தொழில் சாதனங்களைத் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொள்ளத் திட்டம் போட்டிருக்கிறார்கள். இந்தியாவும் இந்த உடன்படிக்கையில் சேரும்படி செய்யப் பட்டிருக்கிறது. யாரால் என்று தெரியாது.

களவு செய்த பொருள் என்று தெரிந்து கொண்டு அதை வாங்கினால் நாமும் களவுக்குப் பொறுப்பாளிகள் ஆவோம். இந்தியா இந்த யுத்தத்தில் சேராமலே இருந்தது. அந்த அளவுக்கு இந்த யுத்தத்தை ஆரம்பித்து நடத்திய பெருங்குற்றம் அதன் தலையில் சுமக்காதிருக்கிறது. பொறுப்பு ஏற்காதிருந்துவிட்டு இப்போது கொள்ளையில் மட்டும் பங்கு கேட்கலாமா?

வெற்றி பெற்ற நாட்டார் "நஷ்டயீடு" என்று கூறிக்கொண்டு ஜெர்மன் யந்திரங்களை எடுத்துவருகிறார்களே, அவற்றை நாம் வாங்கவும் கொண்டுவரவும் செய்யலாமா? 51 ஜெர்மன் யுத்த யந்திரசாலைகள் விற்பனைக்கு வந்திருக்கின்றன. அவைகள் அநியாயத்தாலும் கொடுமையாலும் பேராசையாலும் ரத்த வெறியாலும் கறைப்பட்டிருக்கின்றன. இவைகளை நாம் வாங்கலாமா? வாங்கினால் நாமும் பிரிட்டிஷாரைப் போலவும் அமரிக்கர்களைப் போலவும் ஏகாதிபத்யப்பித்தர்களே ஆவோம். இந்தியாவானது அடிமையாக்கப்பட்டிருக்கும் தேசங்களின் விடுதலையை லட்சியமாகக் கொண்டிருக்குமானால், ஜெர்மனியும் அந்த நிலையிலேயே இருப்பதால், நம்முடைய தேசிய சர்க்கார் இந்தக் கொள்கையை எதிர்க்கவும் இந்தத் திருட்டுச் சொத்தை வாராமல் தடுக்கவும் வேண்டியது அவசியமாகும்.

ஜே. ஸி. குமரப்பா.

## நபி நாயகத்தின் மணி மொழிகள்

காந்தியடிகளுக்கு ஜனவரி 19-ம் தேதி மௌன தினம். அதனால் கீழ்கண்டவாறு எழுதிக்கொடுத்தார் :—

நான் இங்கே சில காலமாகச் சொல்லி வருவதெல்லாம் நபி நாயகத்தின் மணி மொழிகளில் அடங்கியிருக்கின்றன, அவை நமக்கு நன்மை தரும் :—

"தமக்கு எதை விரும்புகிறாரோ அதையே பிறர்க்கும் விரும்புகிறவர்தான் உண்மையான கடவுள் பக்தர் ஆவார்.

தமக்கோ பிறர்க்கோ உழையாதவர் கடவுள் அருளைப் பெற மாட்டார்.

பொய் பேசுபவரும் சொன்ன சொல்படி நடவாதவரும் நம்பிக்கை மோசம் செய்பவரும் என்னைச் சேர்ந்தவர் ஆகார்.

சொன்ன சொல்படி நடப்பவரும் நம்பிக்கை மோசம் செய்யாதவருமே உண்மையான முஸ்லிம்கள்.

எவர் கடவுள் சிருஷ்டிகளிடம் அன்பாக நடக்கிறாரோ அவர்க்கே கடவுள் அன்பு செய்வார்.

எவர் பிறர் மனம் புண்ணாகாமல் பேசுகிறாரோ, எவர் பிறர்க்குத் தீமை செய்யாதிருக்கிறாரோ அவரே பரிபூரணமான முஸ்லிம் ஆவார்.

கல்வி கற்றும் கயவராக இருப்பவரே மக்களில் கடையானவர். கல்வி கற்று நல்லவராக இருப்பவரே மக்களில் தலை சிறந்தவர்.

விபசாரம் செய்கிறவனுக்கு தெய்வபக்தி கிடையாது. விபசாரமோ திருட்டோ செய்கிறவரும் மது அருந்துகிறவரும் கொள்ளை யடிப்பவரும் ஏமாற்றுகிறவரும் முஸ்லிம் ஆகார். ஜாக்கிரதை, ஜாக்கிரதை.

தன்னை வெல்வதே தலை சிறந்த தர்ம யுத்தமாகும்.

முஸ்லிமோ முஸ்லிமல்லாதவரோ யாரானாலும் கஷ்டப்படுத்தப் படுவோர்க்கு உதவி செய்க.

என்னுடைய சிஷ்யர்கள் உண்ணா விரதத்தாலும் புலனடக்கத்தாலுமே தங்களை அலிகள் ஆக்கிக் கொள்கிறார்கள்.

மனிதர் என்பதில் ஆண் ஒரு பாதி, பெண் ஒரு பாதி. இரண்டும் இணை பிரியாதவை.

அறிந்தபடி அனுஷ்டிப்பவரே அறிவு பெற்றவர் ஆவார்.

ஒழுக்கமுள்ள பெண்ணே உலகத்தில் உயர்ந்த பொருள்.

மனைவிக்கு நல்ல புத்திமதி கூறுக. நல்லவளானால் அதைக் கேட்டு நடப்பாள். வீணாகச் சந்தேகித்து மனைவியை அடிமையைப் போல் அடியாதே.

## இருதயத்திலும் கோஷா வேண்டாம்

காந்தியடிகள் ஹிராப்பூர் கிராமத்தில் செய்த பிரார்த்தனைப் பிரசங்கத்தில் கூறியதாவது :—

"முஸ்லிம் வேதத்துக்கு வியாக்கியானம் கூற முஸ்லிமல்லாத எனக்கு உரிமை கிடையாது என்று மதராஸிலும் பம்பாயிலும் உள்ள ஜமியத்துல் உலேமா சங்கத்தார் எனக்குத் தந்தி மூலம் அறிவித்திருக்கிறார்கள். அவர்கள் விஷயம் அறியாமல் கூறுகிறார்கள். நான் இஸ்லாம் மதானுஷ்டானங்களில் தலையிடவில்லை. அப்படிச் செய்ய எனக்கு உரிமையுமில்லை. விருப்பமுமில்லை. நான் கூறியதெல்லாம் நபி நாயகத்தின் மொழிகளை ஆதாரமாகக் கொண்டதேயாகும். அநேக அறிவு படைத்த முஸ்லிம் குடும்பங்கள் கோஷா முறையை அகற்றி விட்டார்கள். ஆனால் அது போதுமா? இஸ்லாம் மதத்தின் லட்சியம் இருதயத்திலும் கோஷா கூடாது என்பதல்லவா?

அது எப்படியாயினும் சரி, என்னுடைய யோசனை இஸ்லாத்துக்கு முரண்பட்டதாயிருந்தால் முஸ்லிம்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. அத்துடன் எனக்குத் தந்தி அனுப்பியவர்கள் முஸ்லிமல்லாத ஜட்ஜிகள் உள்ள பிரிவி கவுன்ஸில் இஸ்லாம் மத விதிகளுக்கு வியாக்கியானம் செய்வதையும் அதை முஸ்லிம்கள் ஏற்றுகொள்வதையும் மறந்துவிடலாகாது என்று கூற விரும்புகிறேன். நானே தீர்ப்புக் கூறவில்லை, அபிப்பிராயமே கூறுகிறேன். பிறர் கண்டிப்பதற்கோ அல்லது சரீர தண்டனை கிடைக்குமென்றோ பயந்து நான் என் கருத்தைக் கூறாதிருப்பேனேயானால் நான் அஹிம்சைக்கும் உண்மைக்கும் சரியான பிரதிநிதியாக மாட்டேன்.

அச்சடித்தவர் பி. அருணாசலம், கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரன் தெரு, ஜி, டி., சென்னை
பிரசுரித்தவர்: சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர் : பொ. திருகூட சுந்தரம்; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை.